*கவனிக்க.- 23.9.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1726 - 2011 සැප්තැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2011.09.30

*1726 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1276 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1279 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

## *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஐப்பசி மாதம் 31 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, புரட்டாதி 07.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | பதவிய | பராக்ரமபுர பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் குறுளுபலாத்த பிரிவில் விவாகப் (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி (பொது) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம் |

9-1314

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - அம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஐப்பசி மாதம் 31 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, புரட்டாதி 8.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | கட்டுவான | கிரம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கிரிவா பத்துவ வடக்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை |

9-1315

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011.09.07.

#### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | மதுரவல்ல | பெல்லபிற்றிய பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் ரைகம் கோறளைய பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

9-1316

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சிறு ஏற்றுமதி பயிர்கள் மேம்பாட்டு அமைச்சு

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

### ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் II "ஆ" வகுப்பு விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் மேற்கூறிய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது. பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது அவருக்கு பரீட்சை எடுப்பதற்குத் தேவையான தகைமைகள் உண்டென ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் உள்ளதா எனப் பரீட்சிக்கும் வேளையில் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதாக வெளிப்படுத்தப்பட்டால் அவ்வேளையிலேயே அவரது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும்.

3. **இப்பதவிகளுக்கு பொது நிர்வாக சுற்றுநிருபம் எம்என்-3 இன் பிரகாரம் மாத சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 15,005 – 4 x 180– 6 x 240 – 11 x 320 – 20 x 360 – ரூபா 27,885 ஆகும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை/தபுதாரர், அனாதைஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படை கல்வித் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும் :-

**கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சா. த.).- சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்திபெற்றிருத்தல்.

க. பொ. த. (உ. த.).- உயிரியல், விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் அடங்கலாக மொத்தம் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் க. பொ. த. (உயர்தரம்) ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல்.

**தொழிற்றகைமைகள்**.- அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் நடாத்தப்பட்ட விவசாயம் தொடர்பான இரு வருட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

6. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 (21 cm x 29 cm) அளவுடைய தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து 1 முதல் 5 வரையான பந்திகள் கட்டாயமாக முன்பக்கத்தில் அடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.)

(ஆ) விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது, அதன் தலைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்பட வேண்டும்.

(இ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2011.10.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் "வருமானத் தலைப்பு 2003-02-13" க்கு பற்று வைக்க பரீட்சைக் கட்டணமாக ரூபா 300 ஐ நாட்டின் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலகமொன்றிலேனும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது.

(ஊ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், தபாலில் காணாமல் போதல், தாமதமாகக் கிடைத்தல் தொடர்பாக திணைக்களம் பொறுப்பேற்காது.

(எ) அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான் அல்லது சட்டத்தரணி அல்லது அரச சேவையில் பதவிநிலை பதவியினை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஏ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

7. **பரீட்சை நடைமுறை**.- (அ) அனுமதி அட்டை.- விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையத்தில் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த அனுமதி அட்டையைக் காட்டத்தவறுகின்ற ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) இப்பரீட்சை 2011, திசெம்பர் மாதமளவில் நடாத்தப்படும் பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் ஏழு (07) நாட்களுக்கு முன்னரேனும் தமது அனுமதி அட்டையைப் பெறாத விண்ணப்பதாரியொருவர் கீழ்வரும் விபரங்களுடன் உடனே "பெலவத்தை, பத்தரமுல்லை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு கிளை" க்கு அறிவித்து விசாரணை செய்துகொள்ள வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பத்தை தபாலிட்ட பதிவுத் திகதியும், பதிவுத் தபால் நிலையமும் இலக்கமும் ;
(v) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் பிரதேச செயலகமும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

(ஈ) ஆளடையாளம்.- தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரால் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(உ) பாடப்பரப்பு :

(i) விவேகப் பரீட்சை (விடய இல. 01) : (1 மணித்தியாலம்) - மொத்தம் 100 புள்ளிகள் :
பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பகுப்பாய்வுத்திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான துறைசார் வினாக்களைக் கொண்டது.

(ii) தொழில்நுட்ப வினாத்தாள் (விரிவாக்க உத்தியோகத்தர்) (விடய இல. 02) : (காலம் : 2 மணித்தியாலம்) - மொத்தம் 100 புள்ளிகள்

தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு.- தொழில்நுட்ப வினாத்தாள் :

(1) பொது விவசாயமும் கோட்பாடுகளும்
(2) பயிர் உற்பத்தியும் மற்றும் பயிராக்கவியல் கோட்பாடுகள் பற்றிய விடயங்கள்
(3) மண், உரம், பயிர்ப் போசணை, சூழற் பாதிப்புகள்
(4) பயிர் இனப்பெருக்கல் முறைகள்
(5) நோயும் பீடைக்காரணியும் அறிகுறிகளும் பாதிப்பும்
(6) விவசாயக் கொள்கைகள், கடந்தகால, நிகழ்கால, எதிர்கால சாத்தியங்கள்

(7) ஏற்றுமதி விவசாயப் பயிர்கள், மிளகு, கறுவா, கோப்பி, கொக்கோ, கராம்பு, ஏலம், சாதிக்காய், வெற்றிலை, பாக்கு என்பன தொடர்பான தாவரவியல் பண்புகள், காலநிலைக் காரணிகள், உரச் செல்வாக்கும் பயிர் போசணையும், நோயும் பீடையும், பின் அறுவடைத் தொழில்நுட்பமும்

(8) ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தி சந்தைப்படுத்தல், ஏற்றுமதிச் சாத்தியங்கள்

(9) சேதனப் பயிர்ச்செய்கை

(10) பண்ணை முகாமை, கன்றுகளும் நடுகைப் பொருட்கள் உற்பத்தியும் நாற்று மேடை முகாமை

(11) விவசாய விரிவாக்கல் முறைகளும் விரிவாக்கவியலும்

(ஊ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும்.

(எ) இப்பதவிக்கான போட்டிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

**8. சேவையில் அமர்த்தும் நியதிகள் :**

(I) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தீவின் எப்பகுதியிலும் சேவையாற்ற தயாராயிருத்தல் வேண்டும்.

(II) தற்போது வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்களும் சேவை நிலையங்களும் கீழே காட்டப்பட்டுள்ளது :-

(i) மொனராகலை
(ii) பதுளை
(iii) அம்பாந்தோட்டை
(iv) காலி
(v) மாத்தறை
(vi) இரத்தினபுரி
(vii) நுவரெலியா

9. **ஆட்சேர்ப்பு முறை.**- போட்டிப் பரீட்சைக்குரிய சகல வினாப்பத்திரங்களும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் திறமை ஒழுங்கு முறைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்திய விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட உயர் புள்ளிகளின் ஒழுங்குமுறைப்படி தகைமை பெற்றவர்கள் ஆட்சேர்ப்புக்கு தெரிவுசெய்யப்படுவர்.

10. இங்கு குறிப்பிடப்படாத வேறேதும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரியால் தீர்மானம் எடுக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியில் கூறப்பட்ட பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கேற்ப செயலாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

11. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதி, உரிய பரீட்சைக் கட்டணங்களை செலுத்தி குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இடமளிக்கப்படுவர்.

டபிள்யூ. டீ. எல். குணரத்ன,
ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர்.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை**

Application for competitive Examination for Recruitment to Vacancies in the Sri Lanka Technological Services in the Department of Export Agriculture

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

1. பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்.) : ————.
(உதா : SILVA A.B)

1.2 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :————.

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :————.

2.1 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :————.

2.2 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) : | | | | | | | | | | |

3. பால் :

ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ?
(விவாகமானவர் - 2, விவாகமாகாதவர் - 1)

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

5. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

6. 6.1 பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

6.2 விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

7. கல்வித் தகைமைகள் :

(அ) கல்விப் பொதுத்தராதர சான்றுப்பத்திரம் (சா. த.) பரீட்சை :

| | முதல் அமர்வு | இரண்டாம் அமர்வு |
|---|---|---|
| பரீட்சையின் பெயர் | .......................................... | .......................................... |
| ஆண்டும் மாதமும் | .......................................... | .......................................... |
| பரீட்சை சுட்டெண் | .......................................... | .......................................... |
| மொழிமூலம் | .......................................... | .......................................... |

| முதல் அமர்வு | |
|---|---|
| பாடங்கள் | தரம் |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

| இரண்டாம் அமர்வு | |
|---|---|
| பாடங்கள் | தரம் |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :

ஆண்டும் மாதமும் .......................................... ..........................................
பரீட்சை சுட்டெண் .......................................... ..........................................
மொழிமூலம் .......................................... ..........................................

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(இ) தொழிற் தகைமைகள் :

| டிப்ளோமாவும் நிறுவனத்தின் பெயரும் | சித்தியெய்திய வருடம் | பரீட்சை சுட்டெண் | சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| | | | | |

8. (அ)

| | |
|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் | |
| திகதி | |
| கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் | |
| செலுத்திய தொகை | |

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழன்றுவிடாதபடி இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிமொழிகின்றேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனம் பெற்றபின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் இப்பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளை ஏற்று நடக்க இணங்குகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

10. ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :***

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................................... எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் அவர்/அவள் ........................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :————.
பதவி :————.
முகவரி :————.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்.)
திகதி :————.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

மேற்கூறிய விண்ணப்பதாரி இப்பரீட்சையை எழுதுவதற்குத் தகுதியுள்ளவர்/தகுதியற்றவர் என உறுதிப்படுத்துகின்றேன்.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :————.

9-1175

---

## ***இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள் - 2011***

மேற்படி சேவையிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள் 2011, நவெம்பர் மாதத்தில் கொழும்பிலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் நடாத்தப்படும். வாய்மொழிப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

2. வினைத்திறன் தடைகாண் இரு பரீட்சைகளுக்கும் பரீட்சார்த்திகள் தோற்றும் வகையிலான கால அட்டவணை தயாரிக்கப்படும்.

3. ***பாடத்திட்டம்.***- முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளை நிருவகிக்கின்ற பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் உரிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு "அ" இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இன்னும் இலங்கை வெளிநாட்டு சேவை தொடர்பில் காணப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளுக்கான பாடத்திட்டமும் ஏனைய ஏற்பாடுகளும் பின்னிணைப்பு "ஆ" இல் குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

அலுவலர்களின் விருப்பின் பேரில் வினைத்திறன் தடைகாண் பரீட்சைகளின் பாடங்களுக்கு ஒரு தடவை அல்லது பல தடவைகள் தோற்ற அவர்கள் அனுமதிக்கப்படுவர். இரண்டாம் மொழிப் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்களுக்கான வாய்மொழிப் பரீட்சைகளை அதே இடத்தில் அதே நேரத்தில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

4. ***பாடங்கள்.***- வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

### ***இலங்கை வெளிநாட்டு சேவை***

### ***1 ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை***

பகுதி I

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| 01 | நிதியியல் | 3 |
| 02 | இலங்கையின் வரலாறும் புவியலும் | 3 |

பகுதி II

| பாட எண் | பாடம் | காலம் மணித்தியாலம் |
|---|---|---|
| 03 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 04 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 05 | சர்வதேச விவகாரங்கள் | 3 |
| 06 | இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒழுங்கு விதிகள் மற்றும் கணனி அறிவு | 3 |

*2 ஆவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை*

*பகுதி I*

| *பாட எண்* | *பாடம்* | *காலம் மணித்தியாலம்* |
|---|---|---|
| 21 | இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும் | 3 |
| 22 | நிருவாகம் | 3 |
| | (அ) அலுவலக முறைமைகளும் மற்றும் முறைகளும் | |
| | (ஆ) தாபனக் கோவை (தொகுதி I மற்றும் தொகுதி II) | |

*பகுதி II*

| | | |
|---|---|---|
| 23 | அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் | 3 |
| 24 | இராஜதந்திர செயன்முறை | 3 |
| 25 | சர்வதேச விவகாரங்கள் | 3 |

**வெளிநாட்டு மொழிகள் :**

| | | |
|---|---|---|
| 07 | அரபு மொழி | 2 |
| 08 | பிரஞ்சு மொழி | 2 |
| 09 | ரஷ்சிய மொழி | 2 |
| 10 | ஸ்பானிய மொழி | 2 |
| 11 | ஹிந்தி மொழி | 2 |
| 12 | சீன மொழி | 2 |
| 13 | ஜேர்மன் மொழி | 2 |
| 14 | யப்பான் மொழி | 2 |
| 15 | ஆங்கில மொழி | 2 |

**இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான பாடங்களும் பாட எண்களும் :**

| | | |
|---|---|---|
| 30 | சிங்களம் (எழுத்து மூலம்) | 2 |
| 31 | தமிழ் (எழுத்து மூலம்) | 2 |
| 32 | ஆங்கிலம் (எழுத்து மூலம்) | 2 |
| 33 | சிங்களம் (வாய்மொழி மூலம்) | |
| 34 | தமிழ் (வாய்மொழி மூலம்) | |
| 35 | ஆங்கிலம் (வாய்மொழி மூலம்) | |

5. இவ்வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்களின் கவனம் கீழே மீளவெளியிடப்பட்டிருக்கும் 1996.09.04 ஆந் திகதிய 701 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின்பால் ஈர்க்கப்படுகின்றது.

"திணைக்களப் பரீட்சை (பதவியுயர்வு மற்றும் வினைத்திறன் தடைகாண் பரீட்சை உட்பட) பதவியுயர்வுப் பரீட்சை இன்னும் வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆகியவற்றுக்கான மொழி மூலமானது ஊழியர்கள் அரசாங்க சேவைக்கு உள்ளாகும் பொருட்டு போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும். மேலும் போட்டிப் பரீட்சையின்றி அடிப்படை ஆட்சேர்ப்பு நிகழ்ந்திருக்கும் பட்சத்தில் பதவியுயர்வு/வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான மொழி மூலமானது அலுவலர் அரசாங்க சேவைக்கு உள்ளாக தகைமை பெற்ற மொழி அல்லது அரச கரும மொழியாக இருத்தல் வேண்டும்.

6. பரீட்சார்த்திகள் வினாத்தாள்களுக்கு விடையளிக்கும் வகையில் பிற நாட்டு மொழிகள் தவிர சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களைத் தயாரிக்க பரீட்சைகள் ஆணையாளரினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலமானது பின்னர் மாற்றப்பட இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உரித்தற்ற மொழி மூலம் ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார் என பின்னர் கண்டுபிடிக்கப் படுமிடத்து அவரது பரீட்சார்த்தித்தன்மை இரத்துச் செய்யப்படும்.

8. பரீட்சார்த்திகள் ஏ4 அளவான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இதனுள் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பங்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். இரு பரீட்சைகளுக்குமாகத் தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் ஒவ்வொரு பரீட்சை தொடர்பிலும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவம் 1 தொடக்கம் 8 வரை முதல் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். உரிய விபரங்கள் தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்கப்படுதல் வேண்டும். (விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது தலையங்கத்தில் கூறப்பட்ட பரீட்சையின் பெயர் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.) மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாகும்.

9. பரீட்சைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் பரீட்சையை நடாத்துவதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கின்ற நிபந்தனைகள் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

10. அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு 2011.10.28 ஆந் திகதிக்கு முன்னராக அனுப்பி வைக்கக்கூடிய வகையில் வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு நிருவாகப் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் பணிபுரிபவர்கள் தமது விண்ணப்பங்களை தூதரகத் தலைவருக்கு ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.) விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதிற்குப் பின்னர் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

11. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை கிடைக்க வில்லையாயின் அவர் பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவுடன் தாமதியாது பின்வரும் விபரங்களுடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும். (தந்தி அனுப்பும் விலாசம் "பரீட்சைகள்" ("exams") பத்தரமுல்லை) :-

(1) பரீட்சையின் பெயர்
(2) முழுப் பெயர்
(3) முழு அஞ்சல் முகவரி

பரீட்சைத் திணைக்களத்திற்கு அண்மையில் வசிக்கும் பரீட்சார்த்திகள் திணைக்களத்திற்கு வருகை தந்து பரீட்சைத் திணைக்களத்தின் "ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்" பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

12. மேற்படி 11 ஆம் பந்தியில் கூறப்பட்ட தேவைப்பாடுகளை அனுசரிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் பின்னரான கடிதத் தொடர்புகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. பின்வரும் ஆவணங்கள் பரீட்சை நிலையத்தில் ஆளடையாளத்தை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இருக்கும் :-

(1) ஆட்கள் பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

14. முதற்தடவை இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணங்கள் விலக்களிக்கப்படுவதுடன் ஏனைய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு அமையும் :-

(அ) முதலாவது அமர்வு (முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் பாகத்திற்கு) கட்டணம் இலவசம்
(ஆ) அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அமர்வுக்கும்

| | ரூ. ச. |
|---|---|
| முழுப்பரீட்சைக்கும் | 1,000 00 |
| ஒரு பாடத்திற்கு | 500 00 |
| வாய்மொழிமூலப் பரீட்சை | 300 00 |

கட்டணங்கள் 20-03-20-10 எனும் வருமானத் தலைப்பிற்கு செலுத்தப்படும் வண்ணம் எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலக அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படல் வேண்டும்.

15. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயமேதும் சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாகும். பரீட்சையைப் பொறுத்தவரையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாகும்.

கருணாதிலக அமுணுகம,
செயலாளர்,
வெளிவிவகார அமைச்சு.

வெளிவிவகார அமைச்சு,
குடியரசுக் கட்டிடம்,
கொழும்பு 01,
2011, செத்தெம்பர் 30.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு - இலங்கை**

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை-2011**

**1st and 2nd Efficiency Bar Examination and Second Language Test for the Officers in Sri Lanka Foreign Service-2011**

மொழி மூலம் [ ] சிங்களம் -2
தமிழ் -3
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக) ஆங்கிலம் -4

1. (அ)(i) கடைசிப் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
(சிங்களத்தில்/ தமிழில்)

(ii) கடைசிப் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில். கடைசிப் பெயருக்குப் பின்னால் முதலெழுத்துக்களை எழுதவும். உ-ம் : SILVA, A.B.)

(ஆ) (i) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(ii) முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

02. முகவரி :----.
(பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக)
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

03. பிறந்த திகதி:-

திகதி : [ | ] மாதம் : [ | ] ஆண்டு : [ | | | ]

04. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

[ | | | | | | | | | ]

05. பால் :- [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)
ஆண் -0, பெண் -1

06. இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனத் திகதி:-

திகதி : [ | ] மாதம் : [ | ] ஆண்டு : [ | | | ]

07. தற்போதைய தொழில் நிலை:

08. விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் : [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டில் இடுக)

| பரீட்சை | உரிய இல. |
|---|---|
| வி.த.கா.1 | 1 |
| வி.த.கா.2 | 2 |
| சிங்களம் (இரண்டாம் மொழி) | 3 |
| தமிழ் (இரண்டாம் மொழி) | 4 |
| ஆங்கிலம் (இரண்டாம் மொழி) | 5 |

9. அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விண்ணப்பிக்கும் பரீட்சைக்குரிய பாட எண்களைச் சுட்டிக்காட்டி தோற்றும் பாடங்களை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (விண்ணப்பத்தில் குறித்துக் காட்டப்பட்ட பாடங்களைத் தவிர ஏனைய பாடங்களுக்குத் தோற்ற பரீட்சார்த்தி அனுமதிக்கப்பட மாட்டார்.)

| பாடம் | பாட எண் |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |
| (vi) | |

10. பரீட்சார்த்தி முன்னர் முழுப் பரீட்சைக்கு அல்லது அதன் பாகத்திற்கு தோற்றியிருந்தாரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறெனில் பரீட்சைச் சுட்டெண், பாடங்கள், வருடம் மற்றும் மாதம் என்பவற்றைக் குறிப்பிடுக :----.

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிமொழிவதுடன் மேலே குறித்துக் காட்டப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப்பரீட்சைக்கு நான் தோற்றத் தகுதியுடையவனாக உள்ளேன் எனவும் உறுதிகூறுகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கூறப்படும் சட்டதிட்டங்களுக்கு உடன்படுகின்றேன் எனவும் உறுதிகூறுகின்றேன்.

பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான ........................... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

செலுத்திய கட்டணம்:- ரூபா:

----,
விண்ணப்பதாரர் கையொப்பம்

திகதி:----.

| |
|---|
| பற்றுச்சீட்டு மூலப்பிரதி இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளவும்) |

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
சமர்ப்பிக்கப்படுகின்றது.

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ...................... என்பவரினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என உறுதிப்படுத்துவதுடன் அவரது கையொப்பத்தையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி:----.

### பின்னிணைப்பு 'அ'

**சிங்களம்**.- சிங்கள மொழியிலான பரீட்சை, எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்துமூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாக அமையும் :-

(i) இலக்கணம்.
(ii) சிங்களத்தில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கையை ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தல்.
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலகக் கடிதம் அல்லது ஆவணத்தின் பகுதியை சிங்களத்திற்கு மொழிபெயர்த்தல்.

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும் :-

(i) சிங்களம் பேசும் ஒருவர் விளங்கி எழுதக்கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை சிங்களத்தில் உரைபெயர்த்து விளக்கிக் கூறல்.
(ii) சிங்களத்திலுள்ள மனுவொன்றை வாசித்தல்.
(iii) உரையாடலும் உரைபெயர்ப்பும்:- இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் சிங்கள மொழியை பரீட்சாத்திகள் புரிந்துகொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**தமிழ்**.- தமிழ் மொழியிலுள்ள பரீட்சை எழுத்து மற்றும் வாய்மொழி மூலப் பகுதியொன்றை உள்ளடக்கியதாக அமையும்.

எழுத்து மூல வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகும் என்பதுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களையும் உள்ளடக்கியதாக அமையும் :-

(i) இலக்கணம்.
(ii) தமிழில் எழுதப்பட்ட மனுக்கள் அல்லது கிராம உத்தியோகத்தரின் அறிக்கையை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தல்.
(iii) ஆங்கிலத்திலுள்ள அலுவலக் கடிதம் அல்லது ஆவணத்தின் பகுதியை தமிழிற்கு மொழிபெயர்த்தல்.

வாய்மொழி மூலப் பரீட்சை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:-

(i) தமிழ் பேசும் ஒருவர் விளங்கி எழுதக் கூடிய வகையில் ஆங்கிலத்தில் இருப்பதான அலுவலக விடயமொன்றை தமிழில் மொழிபெயர்த்து விளக்கிக் கூறல்.
(ii) தமிழிலுள்ள மனுவொன்றை வாசித்தல்.
(iii) உரையாடலும் உரைபெயர்ப்பும்:- இப்பரீட்சையின் நோக்கம் பல சுதேசிய மொழிகளைப் பேசுகின்றவர்களால் பேசப்படும் தமிழ் மொழியை பரீட்சார்த்திகள் புரிந்து கொள்ளும் ஆற்றலை மதிப்பிடுவதாகவும் இன்னும் பொதுவான உரையாடலிலும் வழக்கமான அலுவலக விவகாரங்களிலும் பரீட்சார்த்திகளை அம்மொழியைப் புரிந்துகொள்ள வைப்பதாகவும் அமையும்.

**ஆங்கிலம்**.- ஆங்கில வினாத்தாள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் பின்வரும் விடயங்கள் தொடர்பான வினாக்களை உள்ளடக்கியதாகவும் அமையும் :-

(i) இலக்கணம்
(ii) கிரகித்தல்
(iii) சுருக்கியெழுதுதல்
(iv) அறிக்கை மற்றும் கடிதம் எழுதுதல்
(v) சொல்வளம்

பரீட்சார்த்திகளின் தகவல்களுக்காக வினாத்தாள்களின் மாதிரி யொன்று கீழே தரப்படுகின்றது :-

(a) Fill in the blanks with the correct form of the verb given within brackets:-

During the last war our country .............1 (be) a British Colony .................2 (take) a full part in the war effort. Consequently our tea, rubber and coconut ..............3 (ship) to Britain at very favourable prices and the foreign exchange we ..................4 (earn) ................5 (accumulate) as assets. Again during the Korean War in the early fifties our products .................7 (not have) any exchange problem. However, political independence ..............8 (not given rise) to any effort to...................9 (build up) our economy we ................10 (be) a nation of consumers and we .................11 (squander) our foreign exchange on consumer goods which ................12 (can produce) locally and incidentally diversified our economy. Over the last decade we ................. (begin) to feel the pinch when our primary products ................14 (fail) to command good prices in the world market while our requirements of food both rice and subsidiary food stuffs ............15 (rise) in price.

(b) Fill in the blanks with the correct preposition (where necessary)

As Assistant Secretary ...................16 charge ..............17 subjects, it was my duty to convene groups of officers dealing ................18 different aspect of development work in the Ministry ....................19 time to time. They discussed ...............20 various problems that they confronted and which they could not cope ................21 on their own. We were thus able to share our experience .............22 each other and make concrete proposals ..............23 the Secretary every month. He in turn put ..............24 his own plans for discussion ................25 these meetings.

(c) Underline the correct letters given within brackets that would complete the spelling of the following words.

26. Har...................ment (rass/as/ass)
27. Ember.............(rass/as/ass)
28. Tol..................(arreance/earnce/erence)
29. Par..................arian (liament/limen/liment)
30. Bal...................ing (let/lat/lot)
31. Itin...................(erary/arary/erarie)
32. Pers..................(everance/everence/ewerence)
33. Bour..................(geoise/joursie/juwarsy)
34. Prolet.................(ariet/ariat/eriyat)
35. Com..............ate(memorr/emor/memor)

(d) In each of the following statements underline the correct word within brackets:-

36.The inventory was checked by the Board of (survellance/ survey/surveyours).

37. At the inquiry I had to be satisfied that accused officer had (contradicted/contravened/contaminated) the regulations.

38.Every receipt should have a (counterfoil/counterfeit/ counterpane) for the purpose of audit.

39.There was a possibility that the prosecution had (fabricated/ fumigated/promulgated) the evidence.

40.(Discrete/discretionary/discriminatory) power was given to the Head of the Department under the relevant Act.

41. The Police Party had (laid/lied/lain) in ambush until the bribe taker arrived.

42.The entire staff turned upon (facilitate/infiltrate/felicitate) the watcher on his retirement.

43.In times of national crisis we must avoid (luxuriant/luxurious) habits.

44.Martial music was played over the radio during height of the battle to keep up the (moral/morale/morals) of the people.

45.Candidates are advised to use (stationary/stationery) sparingly owing to the acute paper shortage.

(e) Underline the correct phrase in the brackets that means the same as the word or phrase underlined in each sentence:-

46.In good management the boss should support his staff in their work (back out/back up/back away)

47. The sales and replacement of stocks amounted to over Rs.5,000 (turn out/turn up/turn away)

48.We were warned at the start not to let out work get into arrears (set out/outset)

49.The younger son wasted his father's wealth in a few years (ran over/ran through)

50.I wanted to see the film, but the queue deterred me from going (put away/put off)

**Part B**

Read the following passage carefully and then answer the questions set out below:

Most modern political ideals such as, for example, as justice, liberty, constitutional government and respect for the law or at least the definition of them, began with inflection of Greek thinkers upon the institutions of City State. But in the long history of political thought the meaning of such terms has been variously modified and always that meaning has to be understood in the light of the institutions by which the indicates were to be realized and of the society in which those institutions did their work. The Greek City States was so different from the political communities in which modern men live that it requires no small effort of the imagination to picture its social and political life. The Greek Philosophers were thinking of political practices far different from any that have prevailed commonly in modern world, and the whole

climate of opinion in which the work was done different. Their problems though not without their analogies in the present, were never identical with modern problems, and the ethical apparatus by which political life was evaluated and criticized varied widely from any that now prevails. In order to understand at all accurately what their theories meant is necessary first to realize at least roughly what kind of institutions they had in view and what citizenship connected, as an effect as and an ideal, to the public for whom they wrote. For this purpose the Government of Athens is especially important, partly because it is the best known, but chiefly because it was an object of special concern to the greatest of Greek Philosophers.

As compared with modern states the ancient City-State was exceedingly small both in area and in population. The numbers were exceedingly uncertain but, a figure somewhat in excess of three hundred thousand would be approximately correct. Such an arrangement of a small territory dominated by a single city was typical off the City State.

In each of the following cases, choose the alternative which in your opinion supports the views expressed in the above passage. Place a thick (right mark) against the correct answer:-

51.Athens is significant for the students of Greek political thought mainly because:-

(a) it was the most powerful of the Greek City State;
(b) its ideals had been carefully studied by the Greek themselves;
(c) it had the most ideal form of Government;
(d) it is the best known of the Greek City State.

52.Greek political thought was concerned with problems:-

(a) entirely unrelated to;
(b) identical with;
(c) different from Analogous but to;

53.The moral and religious basis of Greek political idea is:-

(a) very similar to modern moral and religious ideas;
(b) unknown;
(c) very different from modern moral and religious ideas.

54.It is:-

(a) easy;
(b) not at all easy;
(c) impossible, for a modern man to imagine what life was like in a Greek City State.

55. In comparison with the ancient Greek City States are:-

(a) very large;
(b) very small;
(c) about the same size.

56. The population of ancient Greek City State was:-

(a) much less than 300,000
(b) over 3 million
(c) just over 300,000

57. The City State of Athens comparisons:-

(a) a small territory govern by a single city;
(b) a large territory govern by a number of cities;
(c) a small territory with village councils;
(d) a large territory with a decentralized administration.

58. The different times in the history of the world people:-

(a) have thought in basically the same way;
(b) have thought in different ways;
(c) have contradicted the views of people of the previous generation.

59. Details of political theory are derived from Greek political thought:-

(a) because the Greek City States was very similar to modern states;
(b) in spite of Greek City State being very different from modern states;
(c) because modern political theorists are students of Greek Philosophy.

60. The meaning of political ideal at a particular moment in European History since the time of the Greek can be defined only be:-

(a) relating it to its context;
(b) tracing it back to its original meaning among the Greeks;
(c) investigating the meaning of the Greek word for it;
(d) taking into account only those features in it which have persisted through out its history.

61. Write sentences using each of the following words so as to bring out its meaning clearly:-

Arbitration, emoluments, etiquette, consolidate, hypothetical, retrospective, exigencies, evaluate, review, empower.

EITHER

62. Write a letter to the Head of an Educational Institute in an English speaking country, setting out the following information in an orderly manner:-

(i) The equivalence of our examination certificate to the certificate specified in this letter cannot be determined as the examining authorities in Sri Lanka have been consulted by the institution concerned in that country:
(ii) The G.C.E. (Ordinary Level) Credit Pass has been officially equated with an ordinary pass in London (Ordinary Level):
(iii) The receipt of the letter sent to the Commissioner General of Examinations is acknowledged:
(iv) Any further information in this matter may be obtained from the Embassy of the Republic of Sri Lanka in that country:

63. Write a memorandum to the Secretary, Bureau of Standards marking out a case for the adoption of the 24 hours clock in this country stating the advantages of such a measure.

**பின்னிணைப்பு 'ஆ'**

**இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள்**

1. **முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை:**

1.1 முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

1.2 பகுதி I - பின்வரும் பாடப்பரப்புகளிலான பரீட்சை:-

(i) நிதியியல் - நிதியியல் தொடர்பான பரீட்சை பின்வரும் விடயப்பரப்புக்கள் அடிப்படையில் அமையும்:

(அ) இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I (அத்தியாயம் X நீங்கலாக)

(ஆ) நடைமுறை ஆண்டு மதிப்பீடுகள். உ-ம் : அவற்றின் ஒழுங்குகள், வருமானத் தலைப்புகள், நிதி மற்றும் நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்.

(இ) கச்சேரிகளினுள் கையாளப்படும் குறித்த கணக்குகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள்.

(ii) இலங்கையின் வரலாறும் புவியியலும் - இவ்வினாத்தாள் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும். அத்துடன் பரீட்சார்த்தியொருவர் சித்தியடைய ஆகக் குறைந்தது 40% வீதமான புள்ளிகளைப் பெற வேண்டும்.

1.2.1 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சாத்திகள் சித்தியடைய ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகளைப் பெறத் தேவைப்படுத்தப்படுவர்.

1.3 **பகுதி II - விசேட வினாத்தாள்**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்
(iv) இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பு, வெளி விவகார அமைச்சின் ஒழுங்குவிதிகள் மற்றும் கணனி அறிவு

1.3.1 ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் பரீட்சாத்திகள் சித்தியடைய ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகளையேனும் பெறத் தேவைப்படுத்தப்படுவர்.

1.3.2 அலுவலகர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போதே அத்தகைய பரீட்சார்த்தி சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

**குறிப்பு**:- (i) அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான வினாக்கள் பிரதானமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கான விசேட குறிப்புகளை உள்ளிட்டு இலங்கையின் அரசாங்கப் பாராளுமன்ற முறைமை மற்றும் அரசியலமைப்பு விருத்திப் பரிணாம வளர்ச்சி போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்கும். சர்வதேச சட்டம் தொடர்பான வினாக்கள் நாடுகளுக்கிடையிலான உறவுகள், இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் இன்னும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நாடுகளின் கடமைகள் மற்றும் உரிமைகள், தூதுவராலயச் சட்டம் மற்றும் உடன்படிக்கைகளுக்கான சட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

(ii) சட்டத்தரணியாக விளங்கும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து சட்டத்துறையில் பட்டமொன்றைப் பெற்று விளங்கும் அலுவலகர் ஒருவர், அவர் உரிய பரீட்சையில் அப்பாடங்களில் சித்தியொன்றைப் பெற்றுள்ளார் எனக்கருதி அடிப்படை அரசியல மைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும் எனும் வினாத்தாளுக்கு அவர் தோற்றுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

2. **இரண்டாம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை** :

2.1 இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் அலுவலகர்கள் ஒரே அமர்வில் அல்லது வெவ்வேறான அமர்வுகளில் இரு பகுதிகளுக்கும் தோற்றலாம்.

2.2 **பகுதி I - பின்வரும் பாடங்களிலான பரீட்சை ஒன்று** :

(i) இலங்கையின் பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும்,
(ii) நிருவாகம் - இவ்வினாத்தாள் பின்வரும் பரப்புகளை உள்ளடக்கியிருக்கும்:

(அ) அலுவலக முறைமைகளும் ஒழுங்கமைப்பு முறைகளும்.
(ஆ) தாபன விதிக் கோவை - தொகுதி I மற்றும் தொகுதி II

2.3 மேற்படி ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் சகல வினாத்தாள்களிலும் ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகளையேனும் பெறத் தேவைப்படுத்தப்படுவர்.

2.4 **வினாத்தாள் II - விசேட வினாத்தாள்**

(i) அடிப்படை அரசியலமைப்புச் சட்டமும் சர்வதேச சட்டமும்
(ii) இராஜதந்திர செயன்முறை
(iii) சர்வதேச விவகாரங்கள்

2.5 மேற்படி ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாக அமையும் என்பதுடன் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் சகல வினாத்தாள்களிலும் ஆகக்குறைந்தது 40 வீதமான புள்ளிகளைப் பெற வேண்டும்.

2.6 வெளிநாட்டு மொழிகள் :

| | | |
|---|---|---|
| 07 | அரபுமொழி | 2 |
| 08 | பிரஞ்சு மொழி | 2 |
| 09 | ரஷ்சிய மொழி | 2 |
| 10 | ஸ்பானிய மொழி | 2 |
| 11 | ஹிந்தி மொழி | 2 |
| 12 | சீன மொழி | 2 |
| 13 | ஜேர்மன் மொழி | 2 |
| 14 | யப்பான் மொழி | 2 |
| 15 | ஆங்கில மொழி | 2 |

இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான பாடங்களும் பாட எண் களும் :

| | | |
|---|---|---|
| 30 | சிங்களம் | 2 |
| 31 | தமிழ் (எழுத்து மூலம்) | 2 |
| 32 | ஆங்கிலம் (எழுத்து மூலம்) | 2 |

2.6.1 வெளிநாட்டு மொழிகள் மற்றும் இரண்டாம் மொழிக்கான வினாத்தாள்கள் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும். சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்திகள் ஆகக் குறைந்தது 40 வீதமான புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

2.7 அலுவலர் ஒருவர் பல தடவைகளில் தனித்தனியாக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தோற்ற அனுமதிக்கப்படுவார் என்பதுடன் உரிய ஒவ்வொரு வினாத்தாளிலும் அவர் தகுதியான புள்ளிகளைப் பெற்றுள்ள போது அத்தகைய பரீட்சார்த்தி அப்பகுதியில் சித்தியடைந்துள்ளார் எனக் கருதப்படுவார்.

* மேற்கூறிய பரீட்சையின் பிற நாட்டு மொழி தொடர்பான விடயப் பரப்புக்கள் இவ் வர்த்தமானியின் ஆங்கிலப் பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளன.

9-1319

---

## அரச சேவைகள் ஆணைக்குழு

இலங்கை பொறியியலாளர் சேவைக்கு பொறியியலாளர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2011

## (Competitive Examination for the Recruitment of Engineers to the Sri Lanka Engineering Service - 2011)

இலங்கைப் பொறியியலாளர் சேவையின் சிவில், பொறிமுறை மற்றும் மின்னியல் பொறியியலாளர் பதவிகளின் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2011.10.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவிதமாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படும் உறையின் இடதுபுற மேல் மூலையில் "இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2011" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**கவனிக்க.-** மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.-** (i) விண்ணப்பப்படிவமோ அதனுடன் தொடர்பான ஆவணமோ தபாலில் காணாமற்போனதாகவோ தாமதமாகியதெனவோ முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப் படமாட்டாது. இறுதித் நாள்வரை விண்ணப்பங்களைத் தாமதப் படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புகளை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

(ii) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவரூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு. அரச சேவைகள் ஆணைக்குழு நியமன அதிகாரியாகச் செயற்படும்.

**4. தகைமைகள் :**

4.1 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர்.-

(i) இலங்கைப் பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப் பட்ட நான்கு வருடகால முழுமைக்கால தொடர்பான பொறியியல் நுட்பத்துக்குரிய விஞ்ஞானத்துறைப் பொறியியல் பட்டமொன்றைப் பெற்று, இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் தொடர்பான உறுப்புரிமையினைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அடிப்படைக் கல்வித் தகைமையினைப் பெற்றிருத்தல் இருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்துடன் தொடர்பான உறுப்புரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுத்தரும் குறிப்பான பொறியியல் நுட்பத்துடன் தொடர்பாக அந்நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் எல்லாப் பாகங்களிலும் முழுமையான சித்திபெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் தரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் சபையினால் விதந்துரைக்கப்பட்ட அடிப்படைக் கல்வித் தகைமையினைப் பெற்றுத்தரக் கூடிய விதிக்கப்பட்ட பொறியியல் நுட்பத்துடன் தொடர்பான ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் சபையினால் அல்லது அதன் கீழான நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் எல்லாப் பாகங்களிலும் முழுமையான சித்தியினைப் பெற்று, இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தின் தொடர்பான உறுப்புரிமையினைப் பெற்றுக்கொள் வதற்குத் தேவையான கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்கப்பட்ட வேறு பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட விஞ்ஞானமானிப் பொறியியலாளர் பட்டத்துடன் சமமான பொறியியலாளர் பட்டத்தைப் பெற்று, இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்துடன் தொடர்பான உறுப்புரிமையினைப் பெறுவதற்குத் தேவையான அடிப்படைக் கல்வித் தகைமையினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(v) இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உறுப்புரிமை அல்லது உயர் உறுப்புரிமை பெறக்கூடிய விதத்தில் அங்கீகரிக்கப் பட்ட பொறியியலாளர் நிறுவனமொன்றில் விதிக்கப் பட்ட பொறியியலாளர் நுட்பங்களுடன் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட உறுப்புரிமை அல்லது உயர் உறுப்புரிமை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.-** மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் விண்ணப் பப்பத்திரம் ஏற்கப்படும் இறுதி நாளாகும்போது எல்லா வகையிலும் பூரணமாக இருத்தல் வேண்டும்.

*4.2 வேறு தகைமைகள்.-*

(i) பரீட்சார்த்தி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் வர்த்தமானி அறிவித்தலின் தகைமைகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ; குறிப்பிட்ட நாளில் உரிய திறமைகள் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) *உடற் திறமைகள்.-* ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடல் ரீதியாகப் பொருத்தமானவராக இருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(v) மேலே *4.1* இன்கீழ் காட்டப்பட்டுள்ள தகைமைகளுடன் தொடர்பான சான்றிதழ்களை வழங்குவதற்குப் பயன்படும் விளக்கமான முடிவு ஆவணங்களில் (Academic transcript) உள்ளடக்கப்பட்ட விடயங்கள், சேர்த்துக்கொள்ளப்படும் சேவை வகைகளின் தேவைப்பாடுகளுக்கு எல்லா வகையிலும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் ;

(vi) ஏதும் மார்க்கத் துறைகளில் ஈடுபட்டுள்ள எந்த நபரும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவராவார் ;

(vii) *வயது.-* ஆகக்குறைந்த வயதெல்லை *21* ஆண்டுகள், ஆகக்கூடிய வயதெல்லை *35* ஆண்டுகள் ;

(viii) அரசாங்கத் துறையில் அல்லது மாகாண அரசாங்கத் துறையில் தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் (இலங்கை தொழில்நுட்பச் சேவையில் தொழில்நுட்ப அலுவலர் ஒருவர், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் உதவிப் பொறியியலாளர் சேவையின் அலுவலர் ஒருவர் அல்லது புகையிரதத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமையாளர், சேவையின் அலுவலர் ஒருவர்) ஆக கடமையாற்றுகையில் மேலே *4.1* (II), (III), (IV) மற்றும் (V) இல் குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பதிவுசெய்து அதனை வெற்றிகரமாக முடித்த தொழில்நுட்ப அலுவலர்களுக்கான ஆகக்கூடிய வயதெல்லை, சேர்த்துக்கொள்ளப்படும் நாளில் தெரிவுரிமையுள்ள ஓய்வுபெறும் வயதைத் தாண்டாது இருத்தல் வேண்டும். அத்தகைய அலுவலர் ஒருவர் தனது நிரந்தரச் சேவையில் இறுதிக்கு முன்னரான 5 ஆண்டு காலம் திருப்திகரமான முறையில் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் ;

**குறிப்பு.-** மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியாகும்போது எல்லா வகையிலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்.-** உரிய சம்பளப் படிநிலைகளில் வினைத்திறன் காண் தடைகள் சகிதம் ரூபா 22,935-10×645-8×790-17×1,050-ரூபா 53,555 எனும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் இப்பதவிக்கு உரித்தாகும்.

*6.* **சேவையில் ஈடுபடுத்துவதற்கான பொது விதிகளும் நிபந்தனைகளும்.-** (i) இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். மூன்று ஆண்டுகால தகுதிகாண் நிலைக் காலத்திற்கு உட்பட்டதாகவே நியமனம் வழங்கப்படும் ;

(ii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகளுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதோடு நியமனம் பெற்றவர்கள் அரச சேவையிற் போன்று மாகாண அரச சேவையிலும் கடமையாற்றுவதற்கு கடப்பாடுக்கு உடையவராவர் ;

(iii) நியமனம் பெற்றவர்கள் தீவில் விக்கப்படுகின்ற எப்பிரதேசத்திலும் கடமைக்காகச் சமூகமளித்திடல் வேண்டும் ;

(iv) தமக்கு வழங்கப்படும் பதவியில் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளையேற்பதற்கு மறுக்கும் அல்லது கடமையேற்கப் புறக்கணிக்கும் நியமனதாரர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் ;

(v) அரச சேவையில் நியமனங்கள் நிருவகிக்கப்படும் பொது நிபந்தனைகளினாலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *1988*, யூன் மாதம் *07* ஆந் திகதிய *509/07* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைப் பொறியியலாளர் சேவை தாபனக் குறிப்பேட்டில் விதிக்கப்பட்டுள்ள விதிகளாலும், பிரமாணங்களினாலும் அவ்விதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களினாலும் இந்நியமனம் நிருவகிக்கப்படும்.

7. **இலங்கைப் பொறியியலாளர் சேவையின் விசேட சேவை நிபந்தனைகள் :**

(I) முழுமையான தொழில்சார் தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்தியொருவர் நியமனத் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் விதத்தில் 5 ஆம் சம்பளப் படிநிலையில் வைக்கப்படுவார் ;

(II) ஆட்சேர்ப்புத் தரத்திலிருந்து அடுத்த தரத்திற்குப் பதவியுயர்த்தப்பட முன்னர் முழுமையான தொழில் திறமைகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

*8.* **பரீட்சை மொழிமூலம்.-** (i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும் ;

(ii) பரீட்சார்த்தியொருவர் தான் மேலே *4.1* ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்றுக்கொண்ட மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும் ;

(iii) தான் மேலே *4.1* ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற மொழிமூலம் அரசகரும மொழியல்லாதபோது, அத்தகைய விண்ணப்பதாரியொருவருக்கு அரசகரும மொழியொன்றின் மூலம் அல்லது ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும் ;

(iv) தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கும் பரீட்சார்த்தியொருவருக்கு இடமளிக்கப்படமாட்டாது.

9. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.-

(i) விண்ணப்பப்படிவம், பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கருதும் மொழி மூலமே முழுமையாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுகையில் அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு எண்கள் 1.0 தொடக்கம் 4.5 வரை முதலாம் பக்கத்திலும், 5.0 தொடக்கம் 9.0 வரை இரண்டாம் பக்கத்திலும், 10.0 தொடக்கம் 11.0 வரை மீதமானது மூன்றாம் பக்கத்திலும் அமையக்கூடிய விதத்தில் தயாரித்து அதனுடன் தொடர் பான தகவல்கள் தனது சொந்தக் கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தன்னால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம், இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பதையிட்டு விண்ணப்ப தாரர் தேடிப்பார்த்துக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் ஒத்துப்போகாத மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி ஒன்றைக் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் உயர் அத்தியட்சகர் பதவியிலுள்ள ஒருவர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர் அல்லது அரசாங்க சேவையில் ரூபா 2,40,360 இற்கு கூடிய வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர் ஆகிய ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது ;

(iv) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்ட பின்னர், அதனைக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் ஒருவர் பின்வரும் விபரங்களுடன் உடனடியாக ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்குத் தாமதமின்றி அறிவித்தல் வேண்டும். (தந்தி முகவரி : பரீட்சைகள், கொழும்பு)

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதி ;
(உ) விண்ணப்பப்படிவம் தபாலிடப்பட்ட திகதியும் பதிவு இலக்கமும் ;
(ஊ) கொழும்புக்கு வெளியேயான பிரதேசம் ஒன்றாயின், அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்கான முகவரி.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,000 ஆகும். விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதி நாளுக்கு முன்னர், எந்தவொரு மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குப் பரீட்சைக் கட்டணம், வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படுவதற்காகச் செலுத்தப்படுதல் வேண்டும். மாவட்டச் செயலாளர்/பிரதேச செயலாளர் அலுவலகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் நல்ல முறையில் ஒட்டப்படுதல் வேண்டும். இக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. விதிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் மேற்குறிப்பிடப்பட்டவாறு செலுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற் பிரதி யொன்றைக் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

11. **பரீட்சைத் திகதி**.- இப்பரீட்சை 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் அல்லது அதற்குப் பின்னர் கொழும்பில் மாத்திரம் நடத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

12. பரீட்சைக்காக கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப்படிவங்கள் எண்ணிக்கை நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையினை விடக் குறைவாக இருப்பின், பரீட்சை நடத்தப்படாமல் தகைமைகளைப் பரிசீலிப்பதற்காக மாத்திரம் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவுகளின்படி தெரிவுசெய்யும் அதிகாரம் நியமன அதிகார அதிகாரிக்குரியது.

13. **பரீட்சை முறை**.- இலங்கைப் பொறியியலாளர் சேவையில் பதவிகளை எதிர்பார்த்து விண்ணப்பிக்கும் மேலே 4 இன்படி தகுதி பெற்றுள்ள பொறியியலாளர்களின் திறமைகள் வரிசையைத் தீர்மானிப்பதை இலக்காகக் கொண்டு இப்பரீட்சை நடாத்தப்படும். ஆகவே மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சை 100% புள்ளிகள் கொண்ட எழுத்துருவிலான திறமைகாண் பரீட்சை ஒன்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும். மேலே 4.1 இல் குறிப்பிடப்பட்ட பொறியியல் விஞ்ஞானத்தினைக் கற்பது ஊடாகப் பெறப்பட்ட அறிவின் மீது விண்ணப்பதாரியின் சிந்தனை ஆற்றல், தர்க்கிக்கும் ஆற்றல், அவரின் மனதில் மதிப்பாய்வுத் திறமைகள், தீர்மானமெடுக்கும் திறமைகளைப் பற்றி முடிவெடுத்தலைத் தீர்மானிப்பதை இலக்காகக் கொண்டு இப்பரீட்சை வினாப்பத்திரம் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பரீட்சைக் கேள்விப்பத்திரம் பலவகையான கேள்விகளைக் கொண்டதாக இருக்குமென்பதுடன், அதற்காக 1 1/2 மணித்தியால நேரம் அளிக்கப் படும். மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சையில் விண்ணப்ப தாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப் படும் வரிசை முறை தீர்மானிக்கப்படும்.

14. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (I) விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டபத்தில், பரீட்சை மண்டப பிரதானிக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வனுமதிச் சீட்டைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரியொருவருக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(II) பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சையுடன் தொடர்பான அனுமதிச்சீட்டைத் தொடக்கத்திலேயே அப்பரீட்சைக்குத் தோற்றும் நாளில் அங்கு பரீட்சை மண்டப அதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் பின்பற்றப்படவேண்டிய சட்டதிட்ட விதிகள் தொகுப்பொன்று இவ்வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவர். இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படவேண்டி வரும்.

**குறிப்பு**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட எல்லாத் தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்ற ஊகத்தின் அடிப்படையில் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் அல்லது அவள் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூரணப்படுத்தியுள்ளமைக்கான சாட்சி எனக் கணிக்கப்படலாகாது.

15. பரீட்சார்த்தியின் அடையாளம்.- தான் தோற்றுகின்ற பரீட்சை தொடர்பில், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஏதேனும் பதிவேடு ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

16. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்படின் அவரது பரீட்சார்த்தத் தன்மை, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் அல்லது பரீட்சையின் பின்னர் இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள தகவல்கள் பொய்யானவை எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளார் எனக் கண்டுபிடிக்கப்படின் அன்றேல் ஏதும் முக்கியமான ஒரு விடயம் வேண்டுமென்றே மறைத்து இருப்பின் அவர்/அவள் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

17. **நியமனம் செய்வதற்காகத் தெரிவுசெய்யப்படும் முறை**.- மேலே 13 இன் பிரகாரம் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் பின்வரும் ஏற்பாடுகளின்கீழ் நேர்முகப் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.

(i) ஆகக்குறைந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினைப் போன்று இரு மடங்கிற்கு ஒத்த எண்ணிக்கையுடையோர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(ii) அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் என்பதுடன், இங்கு பரீட்சார்த்திகளின் சான்றிதழ்கள் பரீட்சிக்கப்படும்.

(iii) பரீட்சார்த்தியொருவரினால் சமர்ப்பிக்கப்படும் எல்லா ஆவணங்களும் எல்லா வகையிலும் செல்லுபடியானவையாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரமளிக்கப்பட்டவரின் கூற்று இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆவணமும் அல்லது சான்றிதழும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

(iv) மேலே 17 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லாச் செல்லுபடியாகும் பதிவேடுகளும்/சான்றிதழ்களும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விடயமும் சீர்தூக்கிப் பார்க்கப்பட மாட்டாது.

(v) நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(vi) பரீட்சார்த்திகள் சிலர் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அத்தகைய சந்தர்ப்பங்களில் பொருத்தமான முடிவொன்றை மேற்கொள்ளுதல், நியமன அதிகார அதிகாரியினால் நிறைவேற்றப்படுவதுடன், அது இறுதியான முடிவாக இருக்கும்.

18. எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சை முடிவுக் குறிப்பேடு ஒன்று, பரீட்சைக்குத் தோற்றிய எல்லா விண்ணப்பதாரர்களுக்கும், இலங்கைப் பொறியியலாளர் சேவைச் சபையினால், பரீட்சை முடிவுகள் வெளியிடப்படப் பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அனுப்புவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

19. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செய்யப்படும் திகதியும், நியமன அலுவலரினால் தீர்மானிக்கப்படும். ஏதும் வெற்றிட எண்ணிக்கை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கவும் இங்கு பிரமாணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக முடிவுகள் மேற்கொள்வதற்கும் நியமன அலுவலருக்கு அதிகாரமுண்டு. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களுக்கிடையே ஏதும் பொருத்தமின்மை இருப்பின், அப்போது சிங்கள மொழிப் பிரயோகம் வலுவுடையதாக இருக்கும்.

நியமன அலுவலாளரின் ஆணைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2011.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொறியியலாளர் சேவைக்கு பொறியியலாளர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2011**

(COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT OF ENGINEERS TO THE SRI LANKA ENGINEERING SERVICE - 2011)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(தொடர்பான இலக்கத்தை கூண்டினுள் எழுதுக.)

விண்ணப்பிக்கும் குழு :

| | |
|---|---|
| குடியியல் | 1 |
| பொறிமுறை | 2 |
| மின்வலு | 3 |

(தொடர்பான இலக்கத்தை கூண்டினுள் எழுதுக.)

1. பெயர் :-

1.1 முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில மூல எழுத்துக்களில்) உதாரணம் :- SILVA, A. B.

1.2 முதலெழுத்துக்களினால் குறிப்பிடும் பெயர் :----.
(ஆங்கில மூல எழுத்துக்களில்)

1.3 முழுப்பெயர் :----.
(தேசிய அடையாள அட்டையில் உள்ள மொழியில்)

2. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. 3.1 நிரந்தர முகவரி :----.
(ஆங்கில தடித்த எழுத்தில்)

3.2 தொலைபேசி இலக்கம் :- நிலையானது :----.
நடமாட்டமுள்ளது :----.

3.3 தபால் நகரம் :----.

4. 4.1 இன வர்க்கம் :-
(சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையவை - 5)

4.2 பால் (ஆண்/பெண்) :-
(ஆண் - 0, பெண் - 1)

4.3 திருமணமானவர்/திருமணமாகாதவர் :-
(திருமணமாகாதவர் - 1, திருமணமானவர் - 2)

4.4 பிறந்த திகதி :-

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.5 விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாளன்று வயது :-

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

5. 5.1 கல்வித் தகைமைகள் :-

(i) பட்டம் வலிதுடையதாகும் திகதி :-----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-----.
(iii) பதிவு இலக்கமும் திகதியும் :-----.
(iv) பட்டக் கற்கைநெறியின் பெயர் (உதாரணம் : விஞ்ஞானப் பட்டம், பொறியியல் BSc Engineering) : -----.
(v) கற்கைநெறி (உதாரணம் : குடியியல், எந்திரனியல், மின் உற்பத்தி) :-----.
(vi) பட்டம் முடிக்கப்பட்ட ஆண்டு :-----.
(vii) இறுதியாண்டின் விடயங்கள் :-----.
(viii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :-----.

5.2 உயர் தொழில் தகைமைகள் (பெற்றிருப்பின்) (உதாரணம் - MICE, MIE) :-----.

6. தற்போது வகிக்கும் பதவியும் முன்னர் வகித்த பதவியும் இருப்பின் அது பற்றிய விபரம் :-----.
(சேவையில் சேர்ந்த திகதியும் அகன்ற திகதியும் அல்லது ஒதுங்கு வதற்கான காரணங்களும் குறிப்பிடப்படுதல் வேண்டும்)

6.1 பதவி :-----.
6.2 திணைக்களம்/நிறுவனம் :-----.
6.3 நியமனத் திகதி :-----.
6.4 நிரந்தரமானது/ஓய்வூதிய உரித்துடையது/ஓய்வூதியம் அற்றது அல்லது தற்காலிகமானதா எனும் விபரம் :-----.
6.5 பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா எனும் விபரம் :-----.
6.6 பதவியின் சம்பள அளவு, இப்போது கிடைக்கும் சம்பளமும் : -----.
6.7 முன்பு வகிக்கப்பட்ட பதவி பற்றிய விபரங்கள் :-----.

7. ஏதும் குற்றவியல் தவறுகளுக்காக எப்போதாயினும் நீதிமன்றத்தில் குற்றவாளியாகியிருக்கின்றீரா? அவ்வாறாயின் அக்குற்றம் மற்றும் கிடைத்த தண்டனை பற்றிய விபரங்களைத் தருக :----.

8. பணப்பற்றுச்சீட்டு அகலாத விதத்தில் ஒரு பக்கத்தில் நல்ல முறையில் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்)

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
செலுத்திய அலுவலகம் :-----.
திகதி :-----.

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பப்படிவத்தில் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதும் விபரம் உண்மையற்றது என அல்லது பிழையானவையென நான் தெரிவுசெய்யப்படமுன்னர் கண்டுபிடிக்கப்பட முடியுமெனின் அதன் காரணமாக நான் இப்பதவிக்குத் தகுதியற்றுப் போவதற்கும், இப்பதவிக்கு நான் நியமிக்கப்பட்ட பின்னர் அத்தவறு கண்டுபிடிக்கப்படின் எந்தவிதமான இழப்பீடுமின்றி நான் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும், பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**
(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 9 (ii) அழைப்பின்படி இருத்தல் வேண்டும்)

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் (முழுப் பெயர்) திரு./திருமதி/செல்வி ................................................................ என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் ......................... திகதியன்று அவரது/அவளது கையொப்பம் என் முன்னிலையில் வைக்கப்பட்டதென்றும் நான் உறுதிப்படுத்து கின்றேன்.

-----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)
திகதி :-----.

**11. விண்ணப்பதாரர் அரச சேவையில் உள்ளவரெனின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :**

இவ்விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் (முழுப் பெயர்) ……………………… என்பவரை தனிப்பட்ட முறையில் தெரிந்தவரென்றும் ………………… ஆந் திகதியன்று அவரது மாதிரிக் கையொப்பத்தை எனது முன்னிலையில் வைத்தார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

மேலே 9 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை யென்றும் அவரின்/அவளின் பணிகளும் நடத்தையும் ................. என்றும் நான் உறுதிசெய்கின்றேன். இப்போது வகிக்கும் பதவியில் இருந்து அவர் விடுவிக்கப்பட முடியும்/முடியாது.

-----
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(அலுவலக இலச்சினை மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.)
திகதி :-----.

9-1304